# ராக்காச்சியின் கனவு

- நந்தன் ஸ்ரீதரன்

பாண்டியனும் வெள்ளையனும் மருந்தைப் போடுவோம் என்று ஆளுக்குஇருபது ரூபாய்க்கு கஞ்சா வாங்கிக் கொண்டு சுந்தரம் தியேட்டர் தாண்டி வயக்காட்டுப் பக்கம் போனபோதுதான் தொத்தன் அவர்களை தேடி ஓடி வந்தான். “ணேய்.. தெய்வமக்கா கையில வெளக்குமாறோட உங்க ரெண்டு பேத்தையும் தேடிக்கிட்டு இருக்குண்ணே. சிக்குனா வெளக்குமாத்தால அடிச்சே கொன்றும்ண்ணே. அது கண்ணுல படாம ஓடிப் போயிருங்க..” என்று மூச்சு வாங்க சொன்னான்.

பாண்டியனும் வெள்ளையனும் அதிர்ந்து போனார்கள். இப்படி நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எளவெடுத்த தெய்வமக்காவின் மகள் இவர்களை காட்டிக் கொடுப்பாள் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. திரும்பிப் பார்த்தால் சந்தைக் கெடுவின் பின் வாசல் வழியாக கையில் வாள் போல விளக்குமாற்றை ஏந்தி தலைவிரிகோலமாக வந்து கொண்டிருந்த தெய்வமக்கா தெரிந்ததால் இரண்டு பேரும் கஞ்சாவை மறந்து அறுக்க ஆரம்பிக்காத வயக்காட்டுக்குள் விழுந்து ஓடினார்கள்.

*****

தெய்வமக்கா ஊரறிந்த விலைமாது அல்லது பாலியல் தொழிலாளி அல்லது அவர்களது மொழியில் தேவடியா. ஆனால் ஒரு தேவடியாளுக்கு இருக்க முடியாத அல்லது வேண்டாத ஒன்று அவளிடம் இருந்தது. அது கோபமும் தன்மானமும்..

அவள் உடம்பில் கொஞ்சம் நடிகை தீபா மாதிரி இருப்பாள். ஆனால் முக சாயல் கொஞ்சம் கேஆர் விஜயா மாதிரி இருக்கும். உடம்பு தளதள என்று இருக்கும். கேரளாக்காரர்கள் அவளேதான் வேண்டும் என்று நோங்கி வருவார்கள். அவளும் அவளுக்கு மாமா வேலை பார்க்கும் மீசையும் கேரளாக்காரர்களை வைத்து சம்பாதித்ததை சந்தைக் கெடுவிலும் பாலத்துக்கு கீழும் தொழில் பார்க்கும் பாலியல் தொழிலாளிகள் எல்லாம் கதை கதையாக சொல்வார்கள்.

தெய்வமக்கா லேசாக சேலையை ஒதுங்கவிட்டு நடந்தால் கிறங்கி கீழ்ப்படியாத ஆம்பிளை என்று அந்த ஜில்லாவில் யாரும் இல்லை. அதே நேரம் அவள் சேலையை தோளைச் சுற்றி போர்த்தி நடந்தால் என்னமோ இருபது வருடம் கல்யாணமாகி இரண்டு ஜென்மமாக ஒரே ஆம்பிளையாளோடு குடித்தனம் நடத்தும் பெண்மணி மாதிரி தெரிவாள்.

சில நேரம் பள்ளி கல்லூரிகளில் படிக்கும் விடலைகள் அவள் மீது மோகம் கொண்டு காசோடு போய் அவள் முன்னால் நிற்கும். அவளோ “ பச்சப் புள்ள கூட படுத்து எந்திரிக்கிற அளவு நா கேவலமானவ இல்ல தங்கம்.. இந்த காசுக்கு பால் வாங்கி குடி.. போ..” என்று சொல்லி அனுப்பி விடுவாள்.

அதே நேரம் காசு கொடுக்காமல் டபாய்க்கும் எவனையும் அவள் சும்மா விட்டதில்லை. ஆண்டிபட்டிக்கார பால்துரை அப்படிதான் ஒரு முறை அவளிடம் காசு கொடுக்காமல் ஏய்த்து விட்டுப் போனான். இவள் நேராக ஆண்டிபட்டிக்கே

பஸ் ஏறி விட்டாள். பந்தல் போட்ட கடைத் தெருவில் அவள் பால்த்துரையை புரட்டி அடித்து காசு வாங்கியது எல்லாம் வாய் வழி வரலாற்றின் காவியம்.

இப்படிதான் ஒரு இன்ஸ்பெக்டர்.. புதிதாக தேனிக்கு வேலைக்கு வந்தவன். இளைஞன். தெய்வமக்கா போதையில் இருந்தபோது சந்தைக் கெடுவுக்கு ரெய்டுக்கு வந்தான். ஆங்காங்கே ஒதுங்கி இருந்த எல்லா பாலியல் தொழிலாளிகளையும் ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனான். தெய்வமக்கா அன்று சந்தை கெடுவில் தொழில் பார்க்கவில்லை. மந்திரி லாட்ஜில் கேரளாக் காரனோடு இருந்துவிட்டு செகண்ட் ஷோ விடும் நேரத்தில் சந்தைக் கெடு முன்பாக அண்ணாச்சி டீக்கடையில் டீக்குடிக்க வந்திருந்தது. மீசைக்கும் அதற்கும் பஞ்சாயத்தாகி விட்டது. மீசை தனது கமிஷனை தெய்வமக்கா தரவில்லை என்று அவளை கெட்ட வார்த்தைகளால் ஏசத் துவங்கி இருந்தான். தெய்வமக்காவின் தரப்பு நியாயம் என்னவென்றால் அவனுக்குதான் கேரளாக்காரன் கணிசமான கமிஷன் கொடுத்து விடுகிறானே. அப்புறம் அவள் ஏன் கமிஷன் தர வேண்டும் என்பதுதான்..

வாக்குவாதம் கை கலப்பானது. மீசை தெய்வமக்காவின் முடியைப் பிடித்து அடிக்க முயல, தெய்வமக்கா அவனது மர்மஸ்தானத்தைப் பிடித்துக் கொள்ள மீசை கிய்யா கிய்யா என்று கத்தும்போதுதான் அந்த புது இன்ஸ்பெக்டர் அவர்களைப் பார்க்கிறார். பப்ளிக் நியூசென்ஸ் என்று இருவரையும் ஜீப்பில் ஏற்றுகிறார்.

போதை, சண்டை என்று தெய்வமக்கா களைத்திருந்தாலும் இன்ஸ்பெக்டர் அவள் அழகில் கவிழ்கிறார். ஏட்டையாவிடம் பேசி என்ன ஏதென்று புரிந்து கொண்டு ஸ்டேஷனிலேயே அவளுக்கு ஒரு குவாட்டர் அனுப்பி வைக்கிறார். குவாட்டரைப் பார்த்ததும் தெய்வமக்காவுக்குப் புரிந்து போகிறது. அன்றைக்கு போலீஸ் ஜீப்பில் இன்ஸ்பெக்டர் முன்னால் உடைகளை களைந்தது மட்டும் அவளுக்கு நினைவில் இருந்தது.

காலையில் எழுந்து பார்த்தால் கேரளாக்காரன்கள் கொடுத்த ஆயிரத்து இருநூறு ரூபாயை காணவில்லை. மெல்ல முதல் நாள் நடந்தவற்றை எல்லாம் நினைவில் கொண்டு வந்து பார்த்தபோதுதான் அவளுக்கு நடந்தது உறைத்தது. ஜீப்பிலேயே உடைகளை களையச் சொன்ன இன்ஸ்பெக்டர்தான் அந்த பணத்தை திருடி இருக்க வேண்டும் என்பது புரிந்தது.

நேராக ஸ்டேஷன் போய்விட்டாள்.

அவளது கெட்ட நேரமா இல்லை அந்த இன்ஸ்பெக்டரின் கெட்ட நேரமா என்று தெரியவில்லை, அன்றைக்கு என்று பார்த்து அந்த ஸ்டேஷனுக்கு டிஎஸ்பி விசிட். அந்த டிஎஸ்பி பெண்ணாகவும் இருந்து தொலைத்தாள்.

நேராக ஸ்டேஷனுக்குப் போன தெய்வமக்கா உரத்த குரலில் இன்ஸ்பெக்டருக்கு சவால் விடுக்க ஆரம்பித்தாள் : "ஏலேய் என் ........ய குடிக்கி. நா படுத்து சம்பாரிக்கிறவதாண்டா.. படுத்து சம்பாரிச்ச காச களவாண்டு பொழைக்கிற நீ எம்புட்டு கீழ் செம்மம்.. இந்தா பாரு.. உன் கூட படுக்கணுமா... சொல்லு. எம்புட்டு வாட்டி வேணா படுக்குறேன். ஆனா நா சம்பாரிக்கிற காசை களவாண்றத வச்சிக்கிறாத.. படுத்த சம்பாதிச்சதுதாண்டா நாயே.. ஆனாலும் அது நான் உழைச்சு சம்பாதிச்சதுடா.. அதை திருடித் திங்ய உனக்கு எவண்டா ரைட்சு குடுத்தது..? வாடா என் ........ மகனே.. இப்ப படுக்குறேண்டா.. ஆனா என் சம்பாத்தியத்த திருப்பிக் குடுறா ........ மகனே.." என்று சொன்னவள் கையோடு சரசரவென்று உடைகளை

எல்லாம் களைந்து நிர்வாணமாக போலீஸ் ஸ்டேஷனில் நின்றாள். அவள் உடலின் ஒளியில் அனைத்து ஆண் போலீஸ்களின் அடி வயிற்றிலும் தீப்பிடித்தது.

ஆனால் அன்று விசிட்டுக்கு வந்திருந்த பெண் டிஎஸ்பியின் கண்ணில் தீப்பிடித்தது தான் பெரிய விஷயம். அந்த இளம் இன்ஸ்பெக்டர் உடனடியாக சஸ்பெண்ட் ஆனான். சஸ்பெண்ட் ஆன நான்காவது நாளே தேடிப் பிடித்து ரயில்வே லயனோரமாக அந்த இன்ஸ்பெக்டர் வந்து தெய்வமக்காவை தூக்கிப் போட்டு மிதி மிதியென்று மிதித்தான். அவளுக்கு உடம்பெல்லாம் காயம். அத்தனை ரண களத்திலும் கடைசியாக அவள் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "....... மகனே. அடிடா.. எம்புட்டு வேணா அடிச்சிக்க.. ஆனாலும் நீ தேவுடியாகிட்ட காசைக் களவாண்ட .........யக் குடிக்கிதாண்டா.. நான் படுத்து சம்பாரிச்ச காசு உன் உடம்புலயும் ரத்தமா ஓடுது.. த்தூ.." என்று அவன் மூஞ்சி மீது காறித் துப்பினாள். அவள் மயங்கி விழும் அளவுக்கு அடித்துவிட்டுதான் அந்த இன்ஸ்பெக்டர் போனான்.

***********

இவர்கள் இரண்டு பேரும் தேவாரம் ஜமீன்தார் சத்திரம் வழியாக மெயின் ரோடு ஏறினார்கள். எதிர்த்தாற்போலதான் பஸ் ஸ்டாண்டு. அவர்கள் ஓடிய ஓட்டத்துக்கு தெய்வமக்கா ஈடு கொடுக்க முடியாது. வேகமாக ஓடிச் சென்று கம்பம் பஸ்ஸில் ரன்னிங்கில் ஏறிவிட்டார்கள்.

"ஏலேய் மாப்ள.. கையில காசு இருக்காடா..?" என்றான் வெள்ளையன்.

"செருப்பு பிஞ்சிரும்.. உரி உரின்னு உரிச்சு தேக்கம்பட்டிக்காரன்கிட்ட கமிஷன் வாங்குனல்ல.? அதை கோமணத்துல முடிஞ்சு வச்சிக்கிட்டு கேள்வியா கேக்குற..? வேணாம் வேணாம்ன்னு சொல்லச் சொல்ல அந்த புள்ளைய தூக்கச் சொன்னியேடா வென்று.. இப்ப ஒரு தேவுடியாளுக்கு பயந்து பஸ் ஏறி போயிட்டு இருக்கோம்.. மரியாதையா செலவைப் பாத்துக்க.." என்றான்.

டிக்கெட் கேட்டு வந்த கண்டக்டரிடம் பணம் கொடுத்து தாசப்பட்டிக்கு டிக்கெட் எடுத்த வெள்ளையன் சிரித்தபடி, "நோணாம் நோணாம்ன்னு சொல்லிட்டு நான் சோலி பாக்குறப்ப வெளக்கு புடிச்ச மாதிரியே பேசுறியேடா மாப்ள.. புள்ளைய தூக்கிட்டு வந்ததும் முதல்ல சோலி பாத்ததே நீதானடா.." என்று கெக்கெக்கெக்க என்று சிரிக்கவும் பாண்டியன் பட்டு பட்டென்று நான்கைந்து அடியைப் போட்டான். சிரித்தபடி வெள்ளையன் அவற்றை வாங்கிக் கொண்டான்.

*******

தெய்வமக்காவுக்கு காதல் வந்த கதையை மீசைக்கு சரக்கு ஊற்றிவிட்டு இவர்கள் சிரித்து சிரித்துக் கேட்டார்கள்.

அவன் வழக்கம் போல கேரளாக்காரன்தான். தெய்வமக்காவுக்கு கேரளாக்காரர்கள் என்றால் பெரிய மோகம். காசை காசு என்று பார்க்காமல் செலவு செய்வார்கள். அவளுடைய உடலை கிட்டத்தட்ட தொழுவார்கள். அதிலும் அந்த கேரளாக்காரன் அவ்வளவு லட்சணம். தெய்வமக்காவே கொஞ்சம் கிறங்கிப் போய்விட்டாள். பதினைந்து நாள் கான்ட்ராக்டாக வண்டிப் பெரியாருக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். அவனது காதலில் அல்லது காமத்தில் தெய்வமக்கா உருகிப் போயிருக்கிறாள். அவன் கல்யாணம் பண்ணிக்கலாமா என்று கேட்டதும் சரி என்று

சொல்லி இருக்கிறாள். வடநாட்டு டிரிப் போய்விட்டு வந்து கட்டிக்கிறேன் என்று அவன் சொன்னதில் நிரோத் போடாமல் அவனுடன் இருந்திருக்கிறாள்.

வடநாட்டு டிரிப் முடிந்து வர மூன்று மாதம் ஆகும் என்று அவன் சொல்லி இருக்கிறான். பத்து மாதம் ஆகி பிள்ளை பிறந்தபின்னும் அவன் வரவில்லை. இவள் பத்து மாதம் பத்தினியாகவும் பிள்ளைத்தாய்ச்சியாகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து முடித்திருக்கிறாள். எத்தனை நாள்தான் வருமானம் இல்லாமல் வாழ முடியும். பிள்ளை பெற்று மூன்றாம் மாதமே சந்தைக் கெடுவுக்கு வந்து விட்டாள்..

பிள்ளையை சும்மா சொல்லக் கூடாது.. அந்த கேரளாக்காரனின் கலரும் தெய்வமக்காவின் வடிவுமாக பிள்ளை சுடர் மாதிரி இருந்தது. அன்றைய சினிமா கதாநாயகிகளில் மலையாளியாகவும், அழகாகவும் இருந்தது ரேவதிதான் என்பதால் தெய்வமக்கா அதற்கு ரேவதி என்று பெயரிட்டாள்.

வளர வளரதான் பிள்ளைக்கு மூளை வளர்ச்சி இல்லை என்பது தெரிய வந்தது. தெய்வமக்கா பிள்ளையை அழைத்துச் சென்று காட்டாத டாக்டர் இல்லை.. மருந்து கொடுத்து குணப்படுத்த அது நோயில்லை, கை கால் ஊனம் போல மூளை ஊனம் என்று அவளுக்கு புரியவைக்க பதினைந்து டாக்டர்கள் மாற வேண்டி வந்தது..

தெய்வமக்காவின் துயருக்கு அளவே இல்லை. ஆனாலும் பிள்ளையை அவ்வளவு பத்திரமாகப் பார்த்துக் கொண்டாள். மூளை வளர்ச்சி இல்லையே தவிர உடல் வளர்ச்சி அவ்வளவு அற்புதமாக இருந்தது. பிள்ளை தங்கத்தில் செய்த கடவுள் உருவம் போல வளர்ந்தாள். பதினான்கு வருடங்கள்.. தெய்வமக்கா ரேவதியை பேறு முடிந்த நாய் குட்டிகளைக் காப்பது போல காத்தாள்.

அந்த பதினான்கு வயது பிள்ளையைத்தான் இவர்கள் தூக்கிக் கொண்டு போய் சோலி பார்த்து முடித்திருந்தார்கள். அதற்குத்தான் தெய்வமக்கா இவர்களை விளக்குமாற்றோடு தேடி அலைந்து கொண்டிருந்தாள்.

******

தாசப்பட்டியில் இறங்கியதும் மாயி கடைக்குப் போனார்கள். மாயிக்கு இவர்களைப் பார்த்ததும் சந்தோஷமான சந்தோஷம். "கொஞ்சம் பொறுங்கப்பே.. யாவாரத்த முடிச்சிட்டு வந்துர்றேன்." என்று இவர்களை உட்கார வைத்துவிட்டான்.

அவன் கொடுத்த மிச்சரை சாப்பிட்டு டீயிலும் கடைசி மிச்சரைப் போட்டு அள்ளித் தின்றுவிட்டு காத்திருந்தார்கள்.

******

இருவரும் மிகச் சரியாக பிளான் செய்தார்கள். மாட்டு சந்தைக்கு கேரளாக்கார யாவாரிகள் வரும் நாளை கணித்து இறங்கினார்கள். தெய்வமக்காவும் லேசுப்பட்டவள் இல்லை. பிள்ளைக்கு காவலாக கிட்ணம்மா கிழவியை வைத்துவிட்டுதான் போயிருந்தாள். கிட்ணம்மா கிழவியும் முன்னாள் பாலியல் தொழிலாளிதான்.

இவர்கள் ஆளுக்கொரு கோட்டருடன் சென்று தெய்வமக்கா வீட்டுக்கு சற்று தள்ளியிருந்த வேப்பமரத்தடியில் சென்று உட்கார்ந்து குடிக்க ஆரம்பித்தார்கள். தூரத்தில் இருந்து இதைப் பார்த்த கிட்ணம்மா மெல்ல கோழி பத்துவதைப் போல

*இவர்கள் அருகில் வந்தாள். இதைத்தானே அவர்கள் எதிர்பார்த்தார்கள். கிட்ணம்மா கிழவிக்கு பீர் என்றால் பெரும் ஆசை என்பது இவர்களுக்குத் தெரியும். அதனாலேயே ஒரு பீர் வாங்கி வந்திருந்தார்கள். பீரை நீட்டியதும் கிட்ணம்மா கிழவியின் கண்ணில் பொங்கிய பேராசையை அவர்கள் தொட்டு உணர முடியும் போல இருந்தது.*

*திறந்து தருகிறேன் என்று பாண்டிதான் உள்ளே ஒரு தூக்க மாத்திரையையும் போட்டு கிழவியிடம் நீட்டினான். சீக்குக் கோழி போல கிழவி இருபதாவது நிமிடத்தில் சொக்கி சுருண்டு விட்டாள். இருவரும் பதனமாக தெய்வமக்காவின் குடிசையை அணுகி உள்ளே உறங்கிக் கொண்டிருந்த ரேவதியை வாயைப் பொத்தி தூக்கினார்கள். நேரே கரட்டுக்குப் போன ஒத்தையடிப் பாதையில் அவளை தூக்கிச் சென்று வானை நோக்கி கையேந்தியதைப் போல விரிந்து படர்ந்திருந்த சீமைக் கருவேல் மரத்தடியில் கொண்டு சென்று போட்டார்கள். இங்கிருந்து கத்தினால் ஏனென்று கேட்க ஒரு காக்காக் குஞ்சு கூட கிடையாது..*

*******

*ஒரு வழியாக மாயி வேலைகளை முடித்துவிட்டு வர வானம் மசங்கிவிட்டது. இருவரையும் ஆர்வமாக ஒயின்சாப்புக்கு அழைத்துச் சென்றான். எல்லாம் மாயி செலவுதான். எழுபத்துரெண்டு ரூபாய் சரக்கு ஆறாக ஓடியது. வெள்ளையனுக்கும், பாண்டியனுக்கும் தற்கால துயரங்கள் எல்லாம் மறந்து போனது. மாயியோடு சேர்ந்து பழைய பேப்பர் வாங்கும் தொழில் செய்தபோது செய்த ஃபிராடுத்தனங்களை எல்லாம் சிரித்துச் சிரித்து பேசத் துவங்கினார்கள்.*

*அப்போதுதான் பொளிச் பொளிச்சென்று பாண்டியன் பின் மண்டையில் விளக்குமாற்றின் அடிக்கட்டையால் அடி விழுந்தது.*

*பாண்டியன் நிலைகுலைந்து கீழே விழுந்தான். அடுத்தடுத்த அடிகள் வெள்ளையன் மீது இறங்கின. பத்ரகாளி மாதிரி அந்த நாற்றம் பிடித்த ஒயின்ஷாப்பின் வாந்தித் தரையை கூட்டும் அழுக்கு விளக்குமாற்றை கையில் ஏந்தியபடி தெய்வமக்காதான் இருவரையும் மாறி மாறி ஒரு ராக்காச்சி பாம்பை அடிப்பது போல அடித்துக் கொண்டிருந்தாள். மாயிக்கு ஒரு கணம் எதுவும் புரியவில்லை. அவனுக்கு புரிந்ததெல்லாம் அவனது உயிர் நண்பர்கள் அடி வாங்குகிறார்கள் என்பதுதான். போதையில் அது அவனது மண்டைக்கு ஏற கொஞ்சம் நேரமானது. பாண்டியனும், வெள்ளையனும் அடி பட்டு தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்க, மாயி பொளேரென்று தெய்வமக்காவின் பொடனியில் ஒன்று போட்டான்.*

*தெய்வமக்கா கிறங்கிக் கிறுகிறுத்து சுழன்று அந்த ஒயின்சாப் பாரின் முட்டுக் கம்பங்களில் ஒன்றில் மோதி கீழே விழுந்தாள். அவளது மூக்காந்தண்டை உடைந்து ரத்தம் குழாயில் போல ஒழுக ஆரம்பித்தது. விரிந்த மார்பும், ஆறடி உயரமுமான மாயிக்கு அவள் எந்த விதத்திலும் சமானமல்ல. ஆனாலும் வெறி கொண்ட தாய்ப் பூனையைப் போல அவன் மீது பாய்ந்து கடிக்க ஆரம்பித்தாள்.*

*ஆளும்பேருமாக அவளை இழுத்து விலக்கினார்கள். மூக்கிலிருந்து ரத்தம் ஒழுக எதோ காளி போலதான் மூச்சு வாங்க நின்று கொண்டிருந்தாள் தெய்வமக்கா.*

*பாண்டிதான் பேசினான் : "என்னமோ ஒண்ணும் தெரியாத புள்ளைய சோலி பாத்துப்புட்டோம்ன்ற மாதிரி ஆடுற..? ஓம்புள்ளைய சீல் ஒடைச்சது நாங்க கிடையாது. கரட்டுக்குள்ள சீமக்கருவ மரத்தடில உம்புள்ளைய கொண்டுட்டுப்*

போனதும் பரபரன்னு பாவாடைய அந்தப் புள்ளதான் அவத்துச்சு. எங்க ரெண்டு பேரு வேட்டியையும் அதுதான் அவுத்துப் போட்டுச்சு. என் இடுப்பைச் சேந்து கிட்டி போட்ட மாதிரி காலை வளைச்சிக்கிட்டு நல்லாக்கா..?ன்னு அதுதான் கேட்டுச்சு..? ஒரு சிப்ட்டு போதும்ன்னு நினைச்ச எங்களை என்னைய ரெண்டு சிப்ட்டு இவனை ரெண்டு சிப்ட்டு எடுக்க வச்சது ஒன்னோட ஒண்ணும் அறியாப் புள்ளைதான்.. என்னமோ நாங்க ரேப் பண்ணிட்ட மாதிரி வந்து கூப்பாடு போடுற..? “ என்றான்.

தெய்வமக்கா அப்படியே இடிந்து போனது மாதிரி தரையில் உட்கார்ந்தாள். அவள் கண்ணில் கரகரவென்று கண்ணீர் வழிய ஆரம்பித்தது. “............யக் குடிக்கிற பாவி.. பொய் சொல்லாதடா.. “ என்றாள் நடுங்கும் குரலில்.

“இந்தா பாருக்கா.. இந்த கேள்விய எல்லாம் நீ உன் புள்ளைகிட்டதான் கேக்கணும்.. அது நல்லா தேறுன கையி.. தொழில்ல எறக்கி விடு.. காசை அள்ளலாம்..” என்றான் பாண்டியன்.

தெய்வமக்கா மூக்கில் ரத்தம் வடிய அப்படியே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தாள். அப்படியே நெஞ்சில் நெஞ்சில் அறைந்து கொண்டாள். “எலேய் சுனிலு.. நீ சொன்ன மாரியே எம்புள்ளையும் தேவுடியாளாப் போயிட்டாளேடா.. கிறுக்கோ பைத்தியமோ.. ஒரு கேரளாக்காரன் கையில அந்தப் புள்ளைய புடிச்சுக் குடுத்து உன் மூஞ்சில காறித் துப்பணும்ன்னு நினைச்சிட்டு இருந்தேனேடா.. கடைசில நீயே செயிச்சிட்டியேடா.. அய்யோ அய்யோ அய்யோ..” என்று அவள் நெஞ்சில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தாள்.

இவர்கள் மூவரும் ஆளுக்கொரு எழுபத்து இரண்டு ரூவாய் கோட்டரை வாங்கிக் கொண்டு இமுசை இல்லாத இடம் தேடி பாரை விட்டு வெளியே போனார்கள்.

*******